MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

| 07-11-2021 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | பிலவ வருடம் ( ஐப்பசி 21 ) | வருட சந்தா ₹ 200 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|
| புத்தகம் 58 | இதழ் 40 பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/ 2334360 | ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம் துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ் |


# COP26, பலனுள்ள பதில்களை வழங்கும் என்று நம்புவோம்

**(COP : Conference of the Parties)**
**Next Annual UN Climate Change Conference**



அக்டோபர் 29, கடந்த வெள்ளியன்று பிபிசி ஊடகத்திற்கு வழங்கிய ஒலி-ஒளி வலைக்காட்சி செய்தியில் "உலகினர் அனைவரும் கடமையுணர்வுடன் பொறுப்புக்களைப் பகிர்தல் மற்றும் நீதியை அடிப்படையாகக்கொண்ட ஒருமைப்பாடு ஆகியவை வழியாக, நம் பொதுவான இல்லமாகிய இப்பூமிக்கோளத்தைப் பாதுகாப்பதற்கு ஒன்றிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்" என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

அக்டோபர் 31, ஞாயிறன்று, ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் ஐ.நா. ஏற்பாடு செய்துள்ள, COP26 எனப்படும், **காலநிலை மாற்ற உலக உச்சி மாநாட்டில்** உலகத் தலைவர்கள் கலந்துகொள்ளவிருந்ததையொட்டி, பிபிசியின் "இன்றையச் சிந்தனை" என்ற நிகழ்ச்சிக்கு செய்தி அனுப்பியுள்ள திருத்தந்தை, அனைத்துவிதமான எல்லைகள், தடுப்புகள், அரசியல் சுவர்கள் ஆகியவற்றைப் பின்னுக்குத்தள்ளி, இவ்வுலகை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவதற்கு, இம்மாநாடு நல்லதொரு வாய்ப்பு என்று கூறியுள்ளார்.

காலநிலை மாற்றம், கோவிட்-19 பெருந்தொற்று ஆகிய இரண்டும் நம் பலவீனங்களை அதிகமாகவே வெளிப்படுத்தியுள்ளன. நம் பொருளாதார அமைப்புகள் மற்றும் நம் சமுதாயங்களை நாம் அமைக்கும் முறை குறித்து எண்ணற்ற சந்தேகங்களையும், கவலைகளையும் எழுப்பியுள்ளன. இருந்தபோதிலும் பிரச்சனைகள் ஒவ்வொன்றும், புதியதொரு கண்ணோட்டத்திற்கும் திட்டங்களை அமைத்து, அவற்றை விரைவில் செயல்படுத்துவதற்கும், நம் பொதுவான இல்லம், மற்றும் வருங்கால உலகு பற்றிய மீள்சிந்தனைக்கும், நம் பொதுவான நோக்கம் பற்றி மறுமதிப்பீடு செய்வதற்கும் அழைப்பு விடுக்கின்றன.

பல்வேறு சமூக, மனிதாபிமான மற்றும் அறநெறிப் பிரச்சனைகள் சமுதாயத்தில் பெரும் எதிர்தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. நம் பாதுகாப்பு உணர்வை நாம் இழந்துள்ளோம், சக்தியற்றநிலை மற்றும் நம் வாழ்வுமீது கட்டுப்பாட்டை இழந்துள்ள உணர்வை நாம் அனுபவித்து வருகின்றோம். நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் அனைத்தும் மிக ஆழமாக ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளன. இவை, கடவுளின் படைப்பாகிய மாபெரும் கொடையாகிய இப்பூமியில் அனைவரும் ஒன்றிணைந்து வாழ்வதற்கு அச்சுறுத்தலை முன்வைத்துள்ளன.

ஆன்மீக அளவில் மட்டுமல்ல, பன்முக மனமாற்றத்திற்கும் அழைப்புவிடுத்துள்ள திருத்தந்தை, இந்த உலகுக்கு கடவுள் வகுத்துள்ள திட்டத்தின்படி, நம் பொதுவான நோக்கம் மற்றும் மனிதக் குடும்பத்தின் ஒற்றுமை என்ற உணர்வில், நீதியின் அடிப்படையில் உலகைக் கட்டியெழுப்புவதற்கு நமக்குள்ள பொறுப்பை உணர்ந்து செயல்படவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

COP26 காலநிலை மாற்ற உலக உச்சி மாநாட்டிற்குத் தயாரிப்பு நிகழ்வுகள் இறுதிநிலையை எட்டியுள்ள இவ்வேளையில், தற்போதைய சுற்றுச்சூழல் நெருக்கடிக்கு சாரமுள்ள தீர்வுகாண்பதன் வழியாக, வருங்காலத் தலைமுறைகளுக்கு உறுதியான நம்பிக்கை அளிக்குமாறு, அரசியல் தலைவர்கள் மற்றும் சட்ட அமைப்பாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். அக்டோபர் 31, ஞாயிறன்று கிளாஸ்கோவில் துவங்கிய "**COP26 காலநிலை மாற்ற உலக உச்சி மாநாடு**", வருகிற நவம்பர் 12ம் தேதி வரை நடைபெறும். இதில் ஏறத்தாழ 200 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியர் பேனா...

# சமுதாயம் காப்போம்

இருளிலே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை அறியாது வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயம். கவர்ச்சியான விளம்பரங்களின் வலையிலே சிக்கி, அவை சொல்வதை அப்படியே உள்வாங்கிக் கொண்டு, உண்மைக்குப் புறம்பாக, பொய்மையை வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயம் இன்றைய நம் சமுதாயம். உண்மையைத் தெரிந்து கொள்வதற்கும், அதை ஏற்றுக் கொள்வதற்கும் தயங்குகின்றது இச்சமுதாயம்.

**கௌரவம், சுதந்திரம்:** கௌரவம் என்ற மயக்கத்திலே, எதையும் செய்ய தயங்காத மனப்பான்மை கொண்ட சமுதாயம் வளர்ந்து கொண்டிருக்கிறது. உடல் நலத்திற்கு கெடுதல் என்றாலும் வீட்டுச் சாப்பாட்டைவிட எடுப்புச் சாப்பாட்டிலே நாட்டம் கொள்ளும் புதிய தலைமுறை. குடும்ப வருமானம் குறைந்ததே ஆனாலும் விளம்பரங்களை பார்த்து, அதிக விலையுள்ள ஆடைகளை வாங்கிக் குவிக்கும் பேராவல் கொண்ட ஒரு வர்க்கம் வளர்கிறது. மகிழ்வுறு கூட்டம் (சோஷியல் கேதரிங்–Social gathering) என்ற பெயரிலே, மதியிழக்கும் அளவுக்கு, மயக்கமுறுவதை பெருமையாக கருதும், மறுத்துப்போன இதயம் கொண்ட சந்ததி, உருவாகிக் கொண்டிருக்கிறது. பிறரைத் துன்புறுத்துவதிலும், வன்முறையிலும் இன்பம் காணும் ஒரு இனம் தளிர்விட்டுக் கொண்டிருக்கிறது. மேலே சொன்ன இவைகளுக்கு சுதந்திரம், கௌரவம் என்று அடைமொழி கொடுக்கப்படுகின்றது.

**நமக்கு ஈடுபாடு:** சமுதாயம் என்று சொல்லும் போது, என்னைக் கடந்த, என் குடும்பத்தைக் கடந்த ஒன்று, என்று பலர் நம்மையே ஏமாற்றிக் கொள்கிறோம். நம் சொந்த வாழ்க்கையையும் நடைமுறையையும் கவனித்தால் மேற்குறிப்பிடப்பட்ட அவலங்களுக்கு நமக்கும் பங்கு (அ) ஈடுபாடு இருக்கிறது என்பது தெரியவரும்.

**திறந்த மனம் இல்லை:** இத்தகைய நுகர்வு இன்ப வாழ்வு (Consumeristic life) மோசமான பின் விளைவுகளை உருவாக்குகின்றது. மனிதர்களை மாண்போடு நடத்துவதற்குப் பதில், பொருட்களைப் போன்று பயன்படுத்தியப்பின், குப்பையாகத் தூக்கி எறிகின்ற மனப்பான்மை வேரூன்றச் செய்கிறது. பிறரைப் பற்றியோ, குடும்பத்தில் இருப்பவரைப் பற்றியோ, சமுதாயத்தைப் பற்றியோ அக்கறையும் பொறுப்பும் இல்லாத, தன்நல (Self centered) வாழ்விலே நம்மை மூழ்கடித்து விடுகிறது. மேலும் திருந்தும் மனம் இல்லாத பிடிவாதம் உள்ளவர்களாக நம்மை மாற்றி விடுகிறது.

**அரசு உரிமை மீறல்:** தன் கொள்கைகளை நிலைநாட்டிட மக்களின் நல்வாழ்வை ப–யாக்கும் அரசாட்சியை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் அவலம். விலைவாசியைக் கட்டுப்படுத்தி மக்களின் சுமைகளை குறைக்க முன்வராத ஆட்சி மக்கள் தேடிக்கொண்ட வேதனை. வளர்ச்சி, வளமை என்ற புதை மணலுக்குள் மக்கள் புதைந்து கொண்டிருப்பதை கண்டுகொள்ளாத ஆட்சியாளர்கள். வளர்ச்சியடையாது நாடுகளைவிட, இந்தியாவில் பட்டினி இருப்போர் அதிகம் என்பது பத்திரிக்கை செய்தி (தினகரன் 19-10-2021). மக்கள் தங்கள் மீது வைத்த நம்பிக்கையை மறந்து, மக்களின் வாழ்வை நிலை குலையச் செய்வது அரசின் உரிமை மீறல் என்றே கருத இடம் உண்டு.

**அன்பின் வழியது வாழ்க்கை:** மனித வாழ்க்கை என்பது அன்பின் வழியது என்பதை நாம் புரிந்து கொண்டு, மற்றவர்க்கும் அதை புரிய வைக்கும் செய–லே நாம் ஈடுபட வேண்டியது காலத்தின் கட்டாயம். உடம்பின் உள் உறுப்பாய் இருப்பது அன்பு. உடம்பின் புற உறுப்புகளால் எந்த நன்மையையும் செய்ய முடியாது; எனவே நாம் அன்புடையவர்களாக வாழ்ந்தால்தான் மனிதராகப் பிறந்ததின் பயனை அடைந்தவராக முடியும்.

*'புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை*
*அகத்துறுப்பு அன்பி லவர்க்கு'* (குறள் 79).

**உண்மை உணர்வோம்:** பிறந்தேன், இருந்தேன் என்ற தேனுக்குள் விழுந்து மயங்கி மடியும் (இறக்கும்) வண்டாக (ஈயாக) மனித வாழ்வை பலர் முடித்துக் கொள்கின்றனர். பலர் நுகர்வு இன்பத்திற்கு தேவையான பொருள் ஈட்டுவதிலேயே வாழ்மை அழித்துக் கொண்டு, மன நிறைவில்லாமல் தவிக்கின்றனர் (லூக் 12:20). உலக வாழ்வின் நிலையாமையையும், உலக செல்வங்களின் நிலையாமையையும் உணர்ந்து கொண்டால் நுகர்வு இன்ப நாட்டங்களில் இருந்து விடுபடலாம். மிதமிஞ்சிய செல்வப் பற்றுடைய ஒருவரிடம் கடவுள் கேட்கும் கேள்வி. "ஆனால் கடவுள் அவனிடம் அறிவி–யே, இன்றிரவே உன் உயிர் உன்னை விட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்" (லூக் 12:20).

**திருப்பயணம்:** பூமியில் பிறந்தவர்கள் விண்ணகத்தில் இருக்க வேண்டியவர்கள் என்பதை நினைவிற் கொள்வோம். 'நமக்கோ விண்ணகமே தாய் நாடு'; (பி- 3:20). குறிப்பாக கிறிஸ்தவர்களாகிய நாம் இதனை மறந்துவிடக் கூடாது. இந்த உலக வாழ்வு விண்ணகம் நோக்கிய ஒரு திருப்பயணம்.

ஒவ்வொருவரும் பயணித்தாலும், அது தனிப்பயணம் அல்ல; நம்மைப் போன்று பயணிக்கின்றவர்களோடு இணைந்த ஒரு திருப்பயணம். இது திருச்சபையின் (திருஅவையின்) பயணம். இந்த பயணத்தின்போது ஒவ்வொருவரும், தன்னையே தூய்மை படுத்திக்கொண்டு, புனிதமும் மகிழ்ச்சியும் நிறைந்த திருஅவையாக திகழ்ந்திட திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுக்கின்றார். அழைப்புக்கு செவிசாய்த்து, அவரோடு பயணிப்போம். நல்லதொரு சமுதாயத்தை கட்டி எழுப்புவோம்; வாழ்வின் நிறைவை சுவைப்போம், பிறப்பின் பயனை அடைவோம்.



14-11-2021

# முடிவு காலம்

அருள்திரு. S. ஜான்சன்
உதவி பங்குத்தந்தை, முகையூர்.



**I தானி 12:1-3 II எபி 10:11-14,18 மாற்கு 13:24-32**

இறையேசுவில் பிரியமானவர்களே!

நமது வங்கி சேமிப்பு கணக்குகள், நாள்தோறும், நாளைய தேவைக்காக நாம் வாங்கும் பொருட்கள், ஆடைகள், நமது நாளைய, அடுத்த மாத, அடுத்த ஆண்டு திட்டங்கள் என யாவும் நாளை நாம் உயிரோடிருப்போம், வாழ்வோம் என்ற உத்திரவாதத்தை கொடுத்தாலும், இவையனைத்தையும் படைத்து பராமரிக்கும் கடவுள் இன்றைய வாசகங்கள் வழியாக நமக்குக் கூறும் பாடம் சற்று மாறானது. எடுத்துக்காட்டாக, "16ம் உலக ஆயர்கள் மாமன்றத்தை துவக்கியவர் நம் திருத்தந்தை பிரான்சிஸ் என்று கூறும் வத்திக்கான் ஊடகமானது, 2023ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் திருத்தந்தையின் தலைமையில் முடிவுபெறும்" என்று பெயர் குறிப்பிடாதவாறு, பொதுவாக திருத்தந்தையின் தலைமையில் முடிவு பெறும் என்று குறிப்பிட காரணம் நாம் அனைவரும் அறிந்ததே. நீதிமொழிகளின் ஆசிரியர் கூறுவது போல, "எண்ணங்களை மனிதர் எண்ணலாம், ஆனால் எதற்கும் முடிவு கூறுபவர் ஆண்டவர்". (நீமொ 16:1). அதாவது, இன்று, இப்பொழுது மட்டுமே நிச்சயம். எதிர்காலம் என்பதெல்லாம் அவரது கைகளில்.

### துன்ப காலம்:

வேற்றினத்து மக்களால், யூதர்கள் ஒடுக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்ட போது, பலர் வேற்றுத் தெய்வங்களுக்கு தலைவணங்கி அழிவுற்றதையும், சிலர் இறுதிவரை உண்மை கடவுளை வழிபட்டு வெற்றி அடைந்ததையும் கூறுகிறார் இறைவாக்கினர் தானியேல். இச்செய்தி "வெளிப்பாட்டு நடை" என்னும் இலக்கிய கூற்றைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருந்தாலும் (அதாவது முடிவின் காலம், தலைமை வானதூதர், தீர்ப்பு, உயிர்த்தெழுதல்) இப்பகுதியில் வரும் நிகழ்வுகள் அனைத்தும் தனி மனித வாழ்விலும் நடக்கின்றன என்பதே சரியான பார்வையாக இருக்கும். துன்பங்களில் தான் நாம் யார் என்று நமக்குத் தெரியும். நாம் பலவீனமானவர்களா? வலுவற்றவர்களா? உடனடியாக சோதனைகளுக்கு உட்படுபவர்களா? என்பதெல்லாம் வெளிப்படுவது, நாம் துன்பங்களை சந்திக்கும்போதுதான். இத்தருணங்களில், கடவுள் நம்பிக்கையில் மனவுறுதியோடு நாம் இருந்தோமென்றால், கடவுள் நம் சார்பாக இருப்பார். இல்லையேல், நாம் கடவுளை விட்டு வெகுதூரம் சென்றுகொண்டிருப்போம். கொடுங்கோல் மன்னர்களால் தங்கள் கடவுள் நம்பிக்கைக்காக வதைக்கப்பட்ட யூதர்கள் பலர், மன உறுதி இல்லாமல், நம்பிக்கையை இழந்து, முடிவில்லா வெட்கத்திற்கும், இழிவிற்கும் உள்ளானார்கள் என்றும், எச்சூழ்நிலையிலும் கடவுளை மட்டும் பற்றிக் கொண்டவர்களுக்கு தனது முடிவில்லா வாழ்வில் பங்கு கொள்ளும் பேற்றினையும் கடவுள் பரிசாக வழங்குகிறார் என்றும் இறைவாக்குரைக்கிறார் தானியேல்.

### இறுதி காலம்:

நற்செய்தியில் இறுதி நாட்கள் பற்றிய தனது போதனையை முன்வைக்கிறார் இயேசு. தனது சமகாலத்து பாலஸ்தீனத்தில் விளங்கிய கால நிலைகளையும், உருவகமாக அத்திமரத்தையும் மேற்கோள் காட்டி, இவற்றையெல்லாம் அறிந்திருக்கிற நீங்கள், இறையரசின் காலத்தை ஆராயாமல் இருப்பது எப்படி? என்ற கேள்வியை எழுப்புகிறார். காலத்தை அறிவதற்கு முதலில் தேவை, நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற தன்னுணர்வும், நுண்ணுணர்வும். இவ்வாறாக காலத்தை அறிதல் உடனடியாக நம் செயல்களின் திசையை திருப்புகிறது. மழை வருவது போல தெரிந்தவுடன் கால்கள் வேகமாக நகர்கின்றன, அறையின் கதவுகளும், ஜன்னல்களும் அடைக்கப்படுகின்றன, நமது கண்களும், கைகளும் மெழுகுவர்த்தியையும் தீப்பெட்டியையும் குடையையும் நாடுகின்றன. மழை பெய்ய ஆரம்பித்தவுடன், செய்கின்ற வேலைகளை உதறிவிட்டு, நம் முந்துரிமைகளை (Priorities) மாற்றிக்கொள்கிறோம். இவ்வாறு வெளிப்புற காலத்தை கணித்து செயல்படும் நாம், இயேசு அறிவித்த, செயலில் காட்டிய இறையாட்சியின் காலத்தை நாம் ஏனோ உணரவும், உணர்ந்து நம் முந்துரிமைகளை (Priorities) மாற்றி அமைக்கவும் தயங்குகிறோம். காலத்தை அறிதலும், காலத்திற்கேற்ற செயல்பாட்டை அறிதலும் அவசியம். காலம் தப்பிச் செய்யப்படும் எதுவும் பொருந்தாததாகிவிடும். நம்மில் பலருக்கு, எதிர்காலம் குறித்த அதீத அக்கறையில் நம்மையே மிகவும் வருத்திக்கொள்கிறோம். எது எப்போது நடக்க வேண்டுமோ, அது அப்போது நடக்கும். ஆக உலகமே நம் தலையில் இருப்பதுபோல நினைத்து கவலைப்படத் தேவையில்லை என்பதைத்தான் இயேசு பின்வருமாறு கூறுகின்றார். "அந்த நாளையும், வேளையையும் பற்றித் தந்தைக்குத் தவிர வேறு எவருக்கும் தெரியாது, விண்ணகத்திலுள்ள தூதருக்கோ, மகனுக்கோ கூடத் தெரியாது" (மாற் 13:32).

### செயல்பாடு:

இறப்பு வரும்போது வரும். இறப்பு வருகிறது என்று சொல்லி இருப்பை (நிகழ்காலத்தை) இழந்து வாடாதே. இறுதி நாள், பொழுது வரை நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்றே, ஒருவரை ஒருவர் அன்பு செய்வது மட்டுமே.

## பரிபூரண பலன்

பொதுவாக, இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவாக, நவம்பர் மாதத்தின் முதல் 8 நாள்களும் நிறைபேறு பலன்கள் அறிவிக்கப்படும், ஆனால் பெருந்தொற்று விதிமுறைகள் காரணமாக, கடந்த ஆண்டு போலவே, இவ்வாண்டும், நவம்பர் மாதம் முழுவதும் அவை நீட்டிக்கப்பட்டுள்ளன என்று திருஅவையின் மனச்சாட்சி திருப்பீடத்துறை அறிவித்துள்ளது.

திருஅவை வழங்கும் நிறைபேறு பலன்களைப் பெறுவதற்கு, ஒப்புரவு அருளாடையாளத்தில் பங்குபெறுதல், திருப்பலியில் பங்குகொண்டு திருநற்கருணை அருந்துதல் மற்றும் திருத்தந்தையின் கருத்துக்களுக்காக இறைவேண்டல் செய்தல் ஆகியவை வரையறைகளாகும்.



# வசந்தமாய் வாழ்வு

-அருள்பணி. **M. ஜான் கென்னடி,**
*முதல்வர் பொறுப்பு, தூய அந்தோணியார் பள்ளி, நெய்வேலி.*

## 53. வெற்றி – தோல்வி

உலக ஹெவி வெயிட் குத்துச்சண்டைப் போட்டியில் 1964ல், சாம்பியன் லிஸ்டனை எதிர்த்து நின்ற கருப்பு இளைஞன் முகமது அலியை அனைவரும் பரிதாபமாகப் பார்த்தார்கள். போட்டியின் மூன்றாவது சுற்றில் முகமது அலியின் குத்து லிஸ்டனின் புருவத்தைப் பதம் பார்த்தது. காயத்துக்கு மருந்து போட்டு வந்த லிஸ்டன் ஆக்ரோஷமாக தனது தாக்குதலை நடத்தினார். அவரது புருவத்தில் இருந்த மருந்து தெறித்து, முகமது அலியின் கண்ணுக்குள் விழுந்துவிட அடுத்த இரண்டு சுற்றுகள் சிரமப்பட்டு சண்டையிட்ட முகமது அலிக்கு ஆறாவது சுற்றில் கண் உறுத்தல் நீங்க, அதிரடி தாக்குதலில் இறங்கினார். அந்த சுற்று முடிந்த பின்பு, தன் கைமூட்டு இடம் பெயர்ந்திருப்பது லிஸ்டனுக்குத் தெரிந்தது, எனவே தொடர்ந்து போட்டியில் பங்கேற்க முடியாமல் போகவே முகமது அலி உலக சாம்பியன் ஆனார். நிருபர்கள் அவரிடம், 'இந்த வெற்றியை எதிர்பார்த்தீர்களா?' எனக் கேட்க, "இரண்டாவதாக வருபவனை உலகம் ஒருபோதும் ஞாபகம் வைத்துக்கொள்வதில்லை என்று எனது பயிற்சியாளர் எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அதனால், முதல் இடம் தவிர எதையும் எப்போதும் நான் ஏற்றுக் கொள்வதில்லை" என்றார் முகமது அலி. ஆம், அவர் கலந்துகொண்ட எல்லாப் போட்டிகளிலும் வெற்றியே பெற்று, இறுதிவரை முதல்வனாகவே திகழ்ந்தார் அவர்.

நமது வெற்றியானது நாம் யார் என்பதைப் பொறுத்தோ, எங்கே வசிக்கிறோம், என்ன நிலையில் இருக்கிறோம் என்பதைப் பொறுத்தோ அமைவதில்லை. மனோதத்துவ நிபுணர் வால்ட்டர் ஸ்காட், "ஒருவரிடம் உள்ள திறமையைக் காட்டிலும் வாழ்க்கையை அவர் எப்படி அணுகுகிறார் என்ற கண்ணோட்டமே வெற்றிக்கும் தோல்விக்கும் காரணம்" என்கிறார்.

உலகின் நம்பர் ஒன் பணக்காரர் ஆனதும் ரா∴ பெல்லரிடம், 'கோடி கோடியாகப் பணத்தை குவித்துவிட்டீர்கள். இப்போது சந்தோஷம்தானா?' என்று பத்திரிகையாளர்கள் கேட்டபோது, "சந்தோஷம் என்பது பணத்தில் இல்லை, வெற்றியில்தான் இருக்கிறது" என்றார். வெற்றி என்பதே ஒரு மனநிலைதான்.

வெற்றிக்கான பயணத்தில் தோல்வியும் தொடர்ந்து ஒட்டிக்கொண்டு வருவது இயல்பே. தோல்வியில் நாம் பாடம் கற்றுக்கொள்கிறோம். அது அடுத்த செயலைக் கவனமாகச் செய்ய ஒரு எச்சரிக்கையே தவிர, முடிவு அல்ல. எனவேதான் வெற்றியிலும் தோல்வியிலும் நம் மனநிலை எப்படி இருக்க வேண்டும் என்பதை,

***வெற்றியைக் கண்டு மயங்கிவிடாதே***
***தோல்வியும் தொடர்ந்து வரும் - நீ***
***தோல்வியைக் கண்டு துவண்டுவிடாதே***
***தொடர்ந்தொரு வெற்றி வரும்***

என்கிறார் கவிஞர் கண்ணதாசன். டிக் கார்ல்சன் என்பவர் கூறும் வெற்றிக்கான மூன்று தத்துவங்கள் - ① குறிக்கோளைத் தீர்மானம் செய். ② வெற்றிக்குத் தடையாக வருபவற்றை ஆய்வு செய். ③ தடைகளைத் தாண்டும் வழிகளைக் கற்றுக்கொள்.

தாமஸ் ஆல்வா எடிசன் ஒரு காலகட்டத்தில் ரயிலில் பத்திரிக்கை விற்கும் பையனாக இருந்தவர். வேறு எவரையும் விட அதிகமான தோல்விகளைச் சந்தித்தவர் அவர். மற்ற எவரையும்விட அதிகமான முயற்சிகளையும் செய்தவர் அவர். தோல்வி அடையும் ஒவ்வொரு முறையும் தனது கண்டுபிடிப்பு வேலை செய்யாதது ஏன் என்று ஆராய்ந்து கொண்டேயிருப்பார். என்ன மாறுதல் செய்தால் அது வேலை செய்யும், எது சரியாக வேலை செய்யாது, பயன் அளிக்காது என்று கண்டுபிடிக்கும்வரை விடமாட்டார். ஒரு நாளைக்கு பதினெட்டு மணி நேரம் உழைத்தவர் அவர். அவரது 1093 கண்டுபிடிப்புகள் அவர் பெற்ற வெற்றிக்குச் சான்றாகும். எனவே வெற்றியடைய ஒரு சுலப வழி – தோல்வி மூலம் வெற்றி!

அமெரிக்காவில் இரும்புத் தாதுவுக்கு அதிகத் தேவையும், அதற்கு அதிக விலையும் கிடைத்த நேரத்தில், 1897 ல், பாறைகளில் இருந்து இரும்புத்தாது பிரித்தெடுக்கும் கண்டுபிடிப்பில் இறங்கினார் எடிசன். அவரது கண்டுபிடிப்பை செயல்படுத்த பெரிய நிறுவனங்கள் முன் வந்தன. ஆனாலும் அவற்றை நிராகரித்து, தனது முழு செல்வத்தையும் முதலீடுசெய்து சொந்தமாகத் தொழிற்சாலை தொடங்கினார் எடிசன். ஒரு டன் இரும்புத் தாது ஆறரை டாலருக்கு விற்பனையான நேரத்தில், நான்கு டாலர் அடக்க விலையில் அவர் உற்பத்தி செய்தார். ஆனால் அமெரிக்காவின் மிசபா மலைப் பகுதிகளில் உயர் ரக இரும்புத் தாது பெருமளவு இருப்பது கண்டுபிடிக்கப்படவே, அதன் விலை மடமடவெனச் சரிந்தது. நஷ்டமடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று உணர்ந்த எடிசன் தொழிற்சாலையை மூடினார். அவரது நண்பர்களோ, 'சிலருடன் கூட்டு சேர்ந்து தொழில் தொடங்கியிருந்தால் ஒரேயடியாக நஷ்டம் ஏற்பட்டிருக்காது' என்றார்கள். அதற்கு, "நஷ்டம் ஏற்படும் ஒரு வழியைத் தெரிந்து கொண்டது எனக்கு லாபமே! தோல்வி என்பது வீழ்ச்சியல்ல...படிப்பினையே!" என்றார் எடிசன்.

வாழ்வில் வெற்றி பெற விவேகானந்தர் கூறுவது, "ஒரு கருத்தை எடுத்துக்கொள். அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கை மயமாக்கு. அதையே கனவு காண். அந்த கருத்தை ஒட்டியே வாழ்ந்து வா. மூளை, தசைகள், நரம்புகள், உன் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும். அந்த நிலையில் மற்ற எல்லாக் கருத்துக்களையும் தவிர்த்துவிடு. வெற்றிக்கு இதுதான் வழி". மேலும் அவர், "போராட்டங்களையும் தவறுகளையும் பொருட்படுத்தாதே. ஓராயிரம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள். ஆயிரம் முறை நீ தோல்வியுற்றாலும் மீண்டும் ஒரு முறை கைக்கொள்ள முயற்சி செய். தோல்வியின் மூலம் மேலும் நாம் புத்திசாலிகளாகிறோம்" என்கிறார்.

வசந்தம் வீசும்...

## இறைவார்த்தையில் இயற்கை

- அருள்சகோதரி டெரன்ஸ்மேரி, FIHM கடலூர்

**கவியுரை - 19**



### ஈசோப்பு எனும் புனித மூ-கை

(எபி 9:19, திபா 51:7)

(அங்கே ஒரு பாத்திரம் நிறையப் புளித்த திராட்சை இரசம் இருந்தது. அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து **சோப்புத் தண்டில்** பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள் (யோவா 19:29).



**ஈசோப்பு ஒரு மூ-கைச் செடி**

ஓடுகின்ற ஆற்றிற்குள் ஓராயிரம்
உயர்ந்த குணங்கள் இருப்பதுபோல்,
**ஈசோப்பு** எனும் மூலிகைச் செடிக்குள்
ஈராயிரம் மருத்துவ குணங்கள்
இருக்கின்றதாம்.

கொத்துக் கொத்தாக நீல நிறத்தில் மலரும்
பூக்களைக் கண்டு வானமே மகிழுமாம்.

தெய்வீக தரிசனம் கிடைக்கின்றபோது
ஏற்படும் தெய்வீக மணம் போன்று,
ரம்யமான வாசனையை இச்செடி வழங்குகிறதாம்.

நிமிர்ந்து நிற்கும் விளக்குத் தண்டுபோல்
இதன் தண்டுகளும் நேரே நிமிர்ந்து நிற்குமாம்.

நமது முழு உடலும், எழும் பிறைநிலவுபோல்
மின்னி ஜொலிக்க உதவுமாம்
**ஈசோப்பின்** மூலிகை எண்ணெய்.

எபிரேயர்களின் மொழியில் **'அசோப்'** (Azob)
என்றழைக்கப்பட்ட ஈசோப்,
கூடாரங்களையும், புனித இடங்களையும்,
புனிதப் பண்டங்களையும் சுத்திகரிப்பு செய்யும்
புனித மூலிகையாகப் பயன்படுத்தப்பட்டதைக்
காண்கிறோம். (எபி 9:19)



இப்படி ஒரு ஆளுமை கொண்ட
அழகான மூலிகைச் செடிதான்
**ஈசோப்புச் செடி** ஆகும்.

**விவி-யத்தில் இதன் பயன்பாடு**

இஸ்ரயேலின் தலைச்சன் பிள்ளைகளைப்
பாதுகாப்பதற்காக,
கதவுகளின் பக்கங்களில் இரத்த அடையாளமிட,
**ஈசோப்புக்** கொம்பினைத்தான்
பயன்படுத்தப் பணித்தார் ஆண்டவர் (விப12:25).

உடலைச் சுகப்படுத்திக்கொள்ளவும்,
உள்ளத்தைச் சுத்திகரித்துக்கொள்ளவும்,
**ஈசோப்புச்** செடியை
மக்கள் அதிகம் பயன்படுத்தியதாக
"பழைய ஏற்பாட்டு பக்கங்களில் காணமுடிகிறது.

**"ஈசோப்பினால்** என்னைக் கழுவியருளும்" (திபா 51:7)
என்ற தாவீதின் வாக்கு,
மனிதனின் ஈடேற்றத்திற்கு
**ஈசோப்பும்** ஒரு கருவியாகப் பயன்பட்டது
என்பதை உணர்த்துகிறது.

குருதி வழிந்துகொண்டிருந்த
இயேசுவின் திருஉதடுகளை,
இறுதியாய் தொட்டுப் பார்க்க
**ஈசோப்புத் தண்டும்,** கடற்பஞ்சும் மட்டுமே
பாக்கியம் கிடைக்கப் பெற்றன.
அதன் பின்னரே தமது தெய்வீக உயிரின்
இறுதி மூச்சிற்கு விடை கொடுத்தார் இயேசு.

பாஸ்கா விழா கொண்டாடும் போதெல்லாம்
தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும்
சடங்கின்போது
இரத்தத்தைத் தெளிக்கும் சாதனமாக
**ஈசோப்புக் கொத்தை** யூதர்கள் பயன்படுத்தினார்கள்.

**ஈசோப்பின் புனித குணம்**

பகலவனே ஆனாலும் **பணிவு** வேண்டும்:
மன்னவனே ஆனாலும் **மனந்திரும்புதல்** வேண்டும்:
அரசனே ஆனாலும் **ஆரோக்கியம்** வேண்டும்:
திருத்தூதரே ஆனாலும் **தியாகம்** வேண்டும்:
எனவே,
**ப**ணிவின்,
**ம**னந்திரும்புதலின்,
**ஆ**ரோக்கியத்தின்,
**தி**யாகத்தின்,
அடையானமான **ஈசோப்புச் செடி**,
இவைகளைத் தன்னகத்தே கொண்ட
அழகு நிலையமாகத் திகழ்கிறது.

**ஈசோப்பின் மருத்துவ குணம்**

பிளேக் நோயிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள
ரோமானியர்கள் **ஈசோப்பையே** பயன்படுத்தியுள்ளார்கள்.
**ஈசோப்பு** ஈகையுடன் தந்த தனது சாற்றை எடுத்து
மூலிகை ஒயின் தயாரித்துள்ளார்கள்.

கல்லீரல், மற்றும் பித்தப்பை நோய் நீங்கவும்,
குடல்வலி, குடல்வாயு, பெருங்குடல்,
பசியின்மை உள்ளிட்ட செரிமான
மற்றும் குடல் பிரச்சனைகள் தீரவும்,
இருமல், ஜலதோஷம், சுவாசத் தொற்று,
தொண்டைப்புண் மற்றும் ஆஸ்துமா
உள்ளிட்ட சுவாசப் பிரச்சனைகளுக்கு
மருந்தாகவும் இந்த **ஈசோப்பு** பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஈசோப்பு என்னும் புனித மூ-கையே!**

**உனது...**

**ஈ**டுகொடுக்கும் குணத்திலிருந்து நற்சுகத்தையும்,
**ஈ**ட்டி போன்ற தோற்றத்தின்வழி தோல்கொடுத்தலையும்,
**ஈ**டிணையில்லா பண்பிலிருந்து சிறந்த
அடையாளத்தையும்,
**ஈ**ரப்பசைகொண்ட உறுப்புகளிலிருந்து உயிராற்றலையும்,
**ஈ**டேற்றும் மீட்புச் செயலிலிருந்து புனிதத்தையும்,

**சொல்லிக் காட்டாமல்**
**அள்ளித் தரும் உன்**
**ஈகைச் செயலுக்கு,**
**ஈடுசெய்ய எம்மிடம் ஏதுமில்லையே!**





## 8 உறவே கடவுள்



அருள்பணி. மார்ட்டின் டிக்ரூஸ்

### ஓய்வு

அதிகாலையில் எழுந்து ஆண்டவனை தொழுது நாளை தொடங்கும் நம் பாரம்பரியம் மாறி, அரக்கபறக்க எல்லாவற்றிலும் அவசரம் காட்டகூடிய சமூகமாக தடம் மாறியிருக்கின்றோம். ஓய்வில்லா உழைப்புதான் மனித வாழ்வியல் முறையா? எல்லாவற்றிலும் வேகம், அவசரம் ஏன்? உணவில் துரித உணவு (fast food), சோதனை சாவடியில் துரித ஓடுதளம் (fast track) உடையில் ரெடிமேட் ஆடைகள், பயிர்களின் விளைச்சலுக்கான காலத்தை குறைத்து குறுகியகால சாகுபடி, சிறுவர்களுக்கு வயதுவரம்பு மீறிய சுதந்திரம்... அதனதன் காலத்திற்காய் காத்திராமல், இப்படி அவசர அலைச்சல் ஏன்? இந்த வேகமான வாழ்விய-ன் பயன்தான் என்ன? நிம்மதியை இழந்தோம், உடல் ஆரோக்கியத்தை இழந்தோம், ஒழுக்கநெறி வாழ்வுதனை இழந்தோம், நம் அடையாளத்தை இழந்தோம், எல்லாவற்றிற்கும் மேலாக மனித வாழ்வின் உயிர் நாடியான உறவுகளை இழந்தோம்.

**ஓய்வு:** விவி-யம் கற்றுதரும் பாடம். ஓயாமல் உழைப்பது மனித வாழ்வுக்கான திட்டமல்ல. ஓய்வு என்பது மனித வாழ்வின் அங்கமாகும். கடவுளே ஆறுநாட்கள் படைப்பின் முடிவில் 7ம் நாள் ஓய்ந்திருந்தார் என்று நாம் விவி-யத்தில் காண்கிறோம் (தொநூ 2:2). கடவுள் மட்டுமல்ல, கடவுளின் சாய-ல் படைக்கப்பட்ட மனிதனும் ஓய்ந்திருக்க வேண்டும் (விப 20:10, இ.ச 5:14-15). மனிதன் மட்டுமல்ல விலங்கினங்களும் ஓய்ந்திருக்க வேண்டும் (விப 20:10, இ.ச 5:14-15). மனிதன், விலங்குகள் மட்டுமல்ல, நிலத்துக்கும் ஓய்வு வேண்டும் - ஏழாம் ஆண்டு ஆண்டவருக்காக ஓய்ந்திருக்கும் ஆண்டு, நிலத்துக்கும் ஓய்வு வேண்டும் (லேவி 25:4).

**ஓய்வு ஏன்?:** முதலாவது, ஓய்வு என்பது மனிதன் கடவுளுக்கானவன் என்பதற்காக. ஓய்வு என்பது கடவுளுக்காக (லேவி 25:4). கடவுள் ஓய்ந்திருந்ததால் (தொநூ 2:2), கடவுளின் சாய-ல் படைக்கபட்ட (தொநூ 1:27) மனிதனும் ஓய்வுபெற வேண்டும். இரண்டாவது, ஓய்வு என்பது, மனிதன் அடிமையல்ல, மாறாக கடவுளின் உரிமை குடிமகள்(ன்) என்பதற்காக, "எகிப்து நாட்டில் நீ அடிமையாய் இருந்தாய் என்பதையும், உன் கடவுளாகிய ஆண்டவரே தம் வ-ய கரத்தாலும் ஓங்கிய புயத்தாலும் உன்னை அங்கிருந்து கூட்டி வந்தார் என்பதையும் நினைவில் கொள். ஆதலால் ஓய்வுநாளைக் கடைபிடிக்க வேண்டுமென்று உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கட்டளையிட்டார்" (இச 5:15). மூன்றாவதாக, ஓய்வு என்பது நம்மை பாவத்தி-ருந்து கழுவி தூய்மையாக்குவதற்காக. இஸ்ரயேல் மக்களின் பாவப்பரிகார நாள் (Day of Atonement) ஓய்வுநாள் என்றுதான் அழைக்கபடுகிறது. அது உங்களுக்கு நோன்புநாள். அந்த நாள் நீங்கள் முழு ஓய்வெடுக்கும் ஓய்வு நாள் (லேவி 16:31).

**நோவா:** ஏனோக்கிற்கு பிறகு (தொநூ 5:21-24), கடவுளோடு நடந்த அடுத்த நபர் யார் என்றால் நோவா (தொநூ 6:9) 'நோவா' என்ற எபிரேய சொல்லுக்கு 'ஓய்வு' என்பது பொருள். கடவுளுக்கு உகந்தவரான நோவா என்பவரின் பெயரின் பொருளே, ஏன் அவர் கடவுளுக்கு உகந்தவர் என்பதனை வெள்ளிடைமலையாய் காட்டுகின்றது. நோவாவின் தந்தையான இலாமேக்கு. நோவாவின் பிறப்பின்போது சொன்னது, அவன் ஆண்டவரின் சாபத்திற்குள்ளான மண்ணில் நமக்கு உண்டான கடின வேலையிலும், உழைப்பிலும் நமக்கு ஆறுதல் (ஓய்வு) அளிப்பான் என்று சொல்- அவனுக்கு நோவா என்று பெயரிட்டான். (தொநூ 5:29). உபயோகமற்ற கடின உழைப்பு என்பது மனிதனுக்கான சாபமே அன்றி (தொநூ 3:19) வரமல்ல. எனவே இத்தகைய ஓய்வற்ற, உபயோகமற்ற உழைப்பினின்று (சாபத்தினின்று) விடுவிப்பான் என்று என்னிதான் இலாமேக்கு நோவாவிற்கு ஓய்வு என்று பொருள்படும் வரமான நோவா என்று பெயரிட்டான்.

இவ்வாறு பொருளற்ற அவசரமான உழைப்பு, வாழ்வு என்பது மானுட குலத்தின் சாபமேயன்றி வாழ்வு இல்லை, வரம் இல்லை. மாறாக, ஓய்வு என்பது நாம் அடிமைகள் அல்ல, கடவுளின் சாய-ல் படைக்கப்பட்டுள்ள உரிமை குடிமக்கள் என்பதற்கான நிரூபனம். ஓய்வு என்பது நாம் பரிசுத்தமானவர்கள் என்பதற்கான சான்று. பொருளுக்கும், பெயருக்கும், பதவிக்கும், புகழுக்கும் ஆசைப்படாமல் அடிமையாகாமல், கடவுளின் காலத்தை அவசரப்படுத்தாமல், அவருடைய திட்டத்தில் குறுக்கீடு செய்யாமல், கடவுள் கொடுப்பது போதும் என்ற மனநிலையில் கடவுளை நம்பி வாழும் மக்களினம் நாம் என்பதன் வெளிபாடு. "விதைப்பவன் ஒருவன் விதைத்தான், பின் உறங்கிவிட்டு, அறுவடைகாலம் வந்ததும் அறுவடைக்கு சென்றான்" என்று மாற்கு 4:27-29ல் வாசிக்க முடியும். நாம் எல்லாரும் குழம்பி போயிருப்போம். இவனிடமிருந்து எதை கற்பது என்று. ஆனால் இவனிடமிருந்து நாம் கற்க வேண்டியது, கடவுள் பயிருக்கு விளைச்சலை கொடுக்கின்றபோது, அதில் குறுக்கிடாமல் இருப்பது. ஆம், பலசமயங்களில், தம் உபயோகமற்ற அவசர செயல்கள், விளைச்சலை வாழ்வை அழித்துவிடுகின்றன. எனவே பொருளற்ற அவசர உழைப்பு என்கிற சாப அடிமைத்தனத்தி-ருந்து விடுபட்டு, பொருளுள்ள உரிமை மக்களினமாக கடவுளின் புனிதத்தில் ஓய்ந்திருப்போம்.

### வாழ்த்துகிறோம்



அன்புள்ள வாசகப் பெருமக்களே! கடந்த 19 ஆண்டுகளாக நம் சர்வவியாபி இதழில் விவி-யப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த போட்டியை நடத்துபவர் அருட்சகோதரர் **அ.மே.ஜேம்ஸ் என்கிற சூசை மரிய இராஜேந்திரன்** அவர்கள், தாராபுரம் புனித அந்தோணியார் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்கள். 01-11-2021 முதல் இவர்கள் அப்பள்ளியின் **தலைமை ஆசிரியராக** பொறுப்பேற்கின்றார். மாணவ சமுதாயம் பயனடையும் பொருட்டு, அவர் இந்த பொறுப்பினை சிறப்புடன் செய்ய செபிப்போம். அவருக்கு உங்கள் அனைவரின் சார்பாக, புதுவை கடலூர் மறை மாவட்டத்தின் சார்பாக வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

- சர்வவியாபி ஆசிரியர்.



## "தந்தையின் இதயத்தோடு" புனித வளனார் ஆண்டு சிந்தனை



அருள்திரு.M.**லூர்து ஜெயசீலன்**,
பங்குத்தந்தை, வடலூர்.

## 32. புனித வளனாரும் - தொழிலாளிகளும்

**தொழிலாளிகள்:** உலகம் முழுவதும் இயங்குவதும், இருப்பதும் தொழிளாளர்களின் உன்னதமான உழைப்பால்தான். அவர்கள் தங்களின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்து உழைத்து உலகை உருவாக்குகின்றனர். கடவுள் மனிதர்களைப் படைத்தபோது "பலுகிப்பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு (உழைப்புக்கு) உட்படுத்துங்கள்" (தொநூ1/28) என்று சொன்ன அவரது வார்த்தைகளை நிறைவேற்றுகிறார்கள். அத்தகைய தொழிளாளிகளுக்கும் (உழைப்பாளிகளுக்கும்) புனித வளனாருக்கும் என்ன தொடர்பு? அவர் ஏன் தொழிளாளிகளின் பாதுகாவலராக உள்ளார்? என்பதை குறித்து சிந்திப்போம்.

**உழைப்பின் மாண்பு:** ஆதாம் ஏவாள் பாவம் செய்த போது கடவுள், "உன் மனைவியின் சொல்லைக் கேட்டு, உண்ணக்கூடாது என்று நான் கட்டளையிட்டு விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது; உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து நீ உண்பாய்" (தொநூ3/17) என்று உழைப்பை தண்டனையாகக் கொடுக்கிறார். மேலும், "நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்கு திரும்பும் வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய்" (தொநூ3/19) என்று கடவுள் மனிதனிடம் கூறுகிறார். ஆனால் நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது **"கடவுளின் மேலான அருளை மனிதன் வீணடித்தபோது, கடவுள் அவனுக்கு காட்டிய இரக்கத்தின் பெயர்தான் உழைப்பு"**. நீ உழைத்து உண்ணவேண்டும், உன் வாழ்வைக் காத்துக்கொள்ள வேண்டும். என்று கடவுள் அழைப்பு கொடுக்கிறார். எனவே, உழைப்பு என்பது கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான உன்னதமான ஒரு வழியாகும்.

**புனித வளனாரும், உழைப்பும்: "கடவுள் மனிதவுரு எடுத்து வந்தபோது அவரே உழைத்து வாழ்கிறார். அதற்கு புனித வளனார் எடுத்துக்காட்டாக இருக்கிறார்"** என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூருகிறார் (தந்தையின் இதயத்தோடு, எண்.6). திருச்சபையில் உழைப்பு பற்றி சிந்திக்குபொழுது புனித வளனார்தான் சிறந்த முன்மாதிரியாக வருகிறார். திருத்தந்தை 13ம் சிங்கராயர் எழுதிய "ரேரும் நோவாரும்"(15 மே,1891) என்ற மடலில்தான் முதன் முதலாக உழைப்பு புனித வளனாரோடு இணைத்து எழுதப்பட்டது. மீண்டும் திருத்தந்தை 12ம் பத்திநாதர் உழைப்பாளர்களின் பாதுகாவலராக (1 மே, 1955) அறிவித்து அதை மே 1ம் தேதி **"**உழைப்பாளரான புனித வளனார்**"** என்று விழாவாகக் கொண்டாடச் செய்தபோது புனித வளனார் உழைப்போடு நெருக்கமாக தொடர்பு படுத்தப்பட்டார். திருத்தந்தை பிரான்சிஸ் புனித வளனார் ஆண்டை அறிவிக்க வெளியிட்ட "தந்தையின் இதயத்தோடு" (8 டிச 2020) என்ற மடலிலும் புனித வளனாரை உழைக்கும் தந்தையாக(எண்.6) விவரித்துள்ளார். எனவே **திருச்சபை விரும்பும் உழைப்பாளிகளின் முகம் புனித வளனாரின் முகமாக இருக்க வேண்டும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.**

**புனித வளனாரும் தொழிலாளிகளும்:** ①.புனித வளனார் தனது உழைப்பை திருக்குடும்பத்திற்காக அர்ப்பணித்தார். எனவே ஒவ்வொரு உழைப்பாளியும் தனது உழைப்பை தனது குடும்பத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும். ஒவ்வொரு குருவும், துறவியும் தனது உழைப்பை திருஅவை என்ற குடும்பத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும். அதன்மூலம் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்(தந்தையின் இதயத்தோடு, எண்.6).

② இந்திய சூழலில், பிறப்பின் அடிப்படையில் தொழிலைப் பிரிப்பது, தொழிலின் அடிப்படையில் மனிதர்களைப் பிரிப்பது நடக்கிறது. இதை முற்றிலும் தவிர்க்கவேண்டும். அவரவரின் திறமையின் அடிப்படையில் பணிகளைப் பிரிக்க வேண்டும். அவரவரின் விருப்பத்தின் அடிப்படையில் பணிகளைக் கொடுக்க வேண்டும். புனித வளனார் தச்சுத்தொழில் செய்தார், அதை அவர் தானாகவே மனமுவந்து செய்தார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

③ உழைப்பை பொறுத்தவரையில் உடல் உழைப்பு, மன உழைப்பு என்று பிரிக்கலாம். உடல் உழைப்பை செய்யும் நபர்களின் அடிப்படையில் பெரியவர், சிறியவர், ஆண்கள், பெண்கள், ஊனமுற்றவர் செய்வது என்று பிரிக்கலாம். அதைப்போல நிலம், நீர், ஆகாயம், காற்று, நெருப்பு என்று உடல் உழைப்பை செய்யும் இடத்தைப் பொறுத்து பிரிக்கலாம். மன உழைப்பு என்பதை அதன் தன்மையைப் பொறுத்து பிரிக்கலாம். எத்தகைய உழைப்பாக இருந்தாலும் மனிதனால் முடிந்ததை, அதன் வரையரைக்கு உட்பட்ட விதத்தில் செய்ய வேண்டும், செய்ய பணிக்கவேண்டும்.

④ உழைப்பில் நேர்மை, கண்ணியம், கடமை கடைபிடிக்கப்பட வேண்டும். உழைப்பில்தான் மனித குலத்தின் வளர்ச்சி அடங்கியுள்ளது, மனிதனின் மீட்பு அடங்கியுள்ளது(தந்தையின் இதயத்தோடு, எண்.6). உழைப்பு ஏமாற்றப்படுவது, உறிஞ்சப்படுவது, திருடப்படுவது அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டும். உழைப்பு மதிக்கப்பட வேண்டும், பாராட்டப்பட வேண்டும், காக்கப்படவேண்டும்.

⑤ கடின உழைப்புதான் ஒருவனை உயர்ந்த பாதைக்கு அழைத்து வருகிறது. **கடின உழைப்பும், விடாமுயர்ச்சியும்தான் முன்னேற்றத்திற்கான விதைகளாக இருக்கின்றன.** எந்த இடமாக இருந்தாலும் கடினமான உழைப்பு மூலம் ஒருவர் வளர்ச்சியைக் காண முடியும். புனித வளனார் தச்சுத்தொழில் செய்தவர். வெவ்வேறு இடங்களுக்கு சென்ற போதும் அதேப்பணியைத்தான் செய்தார். ஆனால் எங்குமே அவர் கஷ்டப்பட்டதாக விவிலியம் விவரிக்கவில்லை அத்தகைய கடினமான உழைப்பை தனது குடும்பத்திற்காக வழங்கியவர்.

⑥ புனித வளனாரின் வழியில் உழைப்பை போற்றுவோம், கடின உழைப்பை வெளிப்படுத்துவோம். உழைப்பின் மூலம் மீட்புத்திட்டத்தை நிறைவேற்றுவோம். உழைப்பைக் குறித்த நமது மதிப்பீட்டை மாற்றிக்கொள்வோம்(தந்தையின் இதயத்தோடு, எண்.6). ஒவ்வொரு தொழிளாளியும் புனித வளனாரைப் பின்பற்ற வேண்டும்.

**புனித வளனாரே உழைப்பாளிகளை வழிநடத்தும்**

புனித வளனாரே, இந்த கொரோனா பெருந்தொற்று காலத்தில் உலகை உருவாக்கும் உழைப்பாளிகளை உம்மிடம் ஒப்படைக்கிறோம். அவர்களின் கடின உழைப்பை ஆசீர்வதியும். அவர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியத்தை தந்து அவர்களை ஆசீர்வதியும். அவர்கள் என்றும் நலமுடனும், வளமுடனும் வாழ்ந்திட உமது மேலான பரிந்துரையை கொடுத்தருளும். எந்தவொரு குடும்பமும், தனி மனிதனும் வேலையின்றி துன்பப்படக்கூடாது என்று உம்மிடம் மன்றாடுகிறோம்.



# அமைதி கானம்

– **திரு. அல்போன்ஸ் மோசஸ்**-புதுச்சேரி-9.

அந்தக் கல்லறைத் தோட்டம் வண்ண வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. மக்கள் குடும்பமாக கையில் மாலை, ஊதுவத்தி, மெழுகுவர்த்தி போன்றவற்றோடு வர ஆரம்பித்தனர். ஒரு சிலர் அழுது கொண்டே ஓடி வந்து கல்லறையை நெருங்கியதையும் காண முடிந்தது.

பல்வேறு ஊர்களில் குடியேறியவர்கள் அனைவரும் தங்கள் சொந்த ஊருக்கு கல்லறை திருவிழாவிற்கு வந்து தங்களது இறந்து போன மூதாதையரை நினைவு கூர்ந்து அவர்களுக்காக ஜெபித்து செல்வது வழக்கம்.

கல்லறைத் தோட்டத்தின் உள்ளே நுழைந்த போது எனக்கு பல்வேறு நிகழ்வுகள் நிழலாட ஆரம்பித்தது. "ஆடி அடங்கும் வாழ்க்கையடா, ஆறடி நிலமே சொந்தமடா" என்ற பாடல் மனதில் ரீங்காரமிட்டது.

ஆம்! எத்தனை வகையான மனிதர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்து இறந்து இங்கே அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அனைவரும் சொல்வது நிலையில்லா வாழ்க்கை என்பதுதான். அதை ஏன் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதுதான் இன்னும் புரியாத புதிராக உள்ளது.

மாலி மிகச் சிறந்த பாடகி. அந்த ஆலயத்தில் எல்லா நிகழ்வுகளிலும் அவளது பாடல் இடம் பெற்றிருந்து. பலரது திருமணம் மற்றும் இறப்பு திருப்பலியில் முன் நின்று பாடியவள்தான் மாலி. திருமணமாகி மூன்று குழந்தைகளுக்குத் தாயானவள். ஆனால் குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவினால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டு இறந்து போனாள்.

"பக்தியான பெண் இப்படி செய்துவிட்டாளே!" என்று வேதியர் வேதனைப்பட்டார். பங்குதந்தை சோகத்தில் ஆழ்ந்து போனார். மாலியின் தந்தை கல்லறைத் தோட்டத்தில் அவளை அடக்கம் செய்ய அழுது கொண்டே அனுமதி கேட்டார்.

"சூசை நமது ஊர் வழக்கப்படி தற்கொலை செய்து கொண்டவங்க உடலை கோவிலுக்குள் கொண்டு வரக்கூடாது. சாவு மணி அடிக்கக் கூடாது. பூசை வைக்கக் கூடாது. கல்லறையில் கூட தனி இடத்தில்தான் புதைக்க வேண்டும். இதெல்லாம் உனக்குத் தெரியாதா?" என்று அடுக்கிக் கொண்டே போனார் பங்குப் பேரவை செயலர் மாணிக்கம்.

"உண்மைதானய்யா, ஆனா என் மக பல வருடமா கோயில்ல நடந்த நல்லது கெட்டதுக்கெல்லாம் பாட்டுப் பாடிகிட்டிருந்தா. ஆனா அவ சாவுக்கு யாரும் ஜெபிக்க, பாட இல்லாம போச்சே" என்று புலம்பினார் சூசை. "பாதரை தொந்தரவு செய்யாதே வழக்கத்தை மீறி அவர் கல்லறைக்கு வரமாட்டார்" என்றார் மாணிக்கம்.

திடீரென்று அங்கு வந்த வயதான மேரி அக்கா வேதியரின் கையிலிருந்த ஜெப புத்தகத்தைப் பிடுங்கிக் கொண்டு ஓடிச் சென்று ஆலய மணியை அடித்து விட்டு குறுக்கு வழியாக கல்லறைத் தோட்டத்திற்குள் வந்து கொண்டிருந்த மாலியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டாள். அம்மா! அம்மா! என்ற பிள்ளைகளின் அழுகுரலை அடக்கி "இறந்தோர் வாழ்வு ஒளிபெறுக" என்ற பாடலைப் பாடினாள்.

வாழ்நாள் முழுவதும் பிறருக்காகப் பாடிய மாலிக்காக மேரியக்கா பாடிய பாடலை அமைதியாகக் கேட்டுக் கொண்டே நீண்ட உறக்கத்திற்காக கல்லறைக்குள் முடங்கினாள் மாலி.

# புனித வெரோனிக்காவின் கைக்குட்டை

செல்மா லேகர்லோஃப்

(சுவீடன் நாட்டின் நோபல் பரிசு பெற்ற முதல் பெண் எழுத்தாளர்)

**திரு. ஜெயராஜ் தானியேல்,** முத்தியால்பேட்டை, புதுவை-3



சென்ற இதழ் தொடர்ச்சி...

"அவர் கைகளை என் தலைமீது வைத்து நோயிலிருந்து என்னை விடுவிப்பார் என்பதால்." பிறகு அந்த மனிதர் அவளை நெருங்கி வந்து அவள் நெற்றியில் கை வைத்தார். ஆனால், அவளோ, "நீங்கள் என் தலைமீது கை வைப்பதால் என்ன பயன்? நீர் ஒன்றும் தீர்க்கதரிசி அல்லவே?" என்றாள். அதற்கு அவர் "இப்பொழுதே, நீ அதோ அந்த மலையடிவாரத்தில் இருக்கும் நகருக்குள் சென்று குருமார்களிடம் உன்னை காட்டு" என்றார்.

"நான் குணமடைவேன் என்று நம்பியதால் இவர் என்னைப் பரிகாசம் செய்கிறார். அவரிடம் பேசி பிரயோஜனமில்லை" என்று நினைத்தவள், தன் பயணத்தைத் தொடர்ந்தாள். சிறிது நேரங்கழித்து, வேட்டையாடுவதற்காக ஒருவன் குதிரை மீதேறி வந்து கொண்டிருந்தான். அவன் தன்னை நெருங்குவதற்குள், "அருகில் வரவேண்டாம்! நோயுற்றிருக்கிறேன். நாசரேத்தூரைச் சார்ந்த தீர்க்தரிசியை எங்கே காண்பது என்பதை மட்டும் சொல்லுங்கள்" என்றாள்.

அவளை நெருங்கிக் கொண்டே, "எதற்காக தீர்க்கதரிசியைப் பார்க்க வேண்டும்?" என்று கேட்டான் அவன்.

"அவர் என் தலைமீது கை வைத்து என்னை நோயிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று விரும்புகிறேன்."

அவன் இன்னும் சற்றுநெருங்கிவந்து, "என்ன நோயிலிருந்து விடுபட விரும்புகிறாய்? நீ நன்றாகத் தானே இருக்கிறாய்!" என்றான்.

"நான் ஒரு தொழுநோயாளி என்பதைப் பார்த்தால் தெரியவில்லையா? மலைக்குகையில் தொழுநோயாளிகளுக்குப் பிறந்தேன்."

ஆனால், அந்த மனிதன் அன்றலர்ந்த ரோஜாவைப் போல் அழகாக, சுத்தமாக இருந்த அவளை மேலும் நெருங்கியவாறு, "யூதேயாவிலேயே மிகவும் அழகுள்ள கன்னிப்பெண் நீ ஒருத்திதான்!" என்று வியந்து பாராட்டினான்.

"தயவு செய்து, நீங்களும் பரிகாசம் செய்யவேண்டாம். நான் உருக்குலைந்து, ஒரு வனவிலங்கின் உறுமலைப் போல் என் குரலும் இருப்பதை நானறிவேன்."

அவன் அவளுடைய கண்களை ஊடுருவிப் பார்த்துக் கொண்டே சொன்னான்: "உன் குரல் வசந்த காலசிற்றோடையில் கூழாங்கற்களின் மீதுபட்டு தெறிக்கும் அலைபோல் இருக்கிறதே! உன் முகம் சூரியகாந்தி பட்டுபோல பளபளக்கிறதே!"

அவன் அவளை மேலும் நெருங்கி வந்தபொழுது குதிரையின் மீதிருந்த பளபளப்பான அலங்காரப் பொருட்கள் அவள் முகத்தைப் பிரதிபலித்தன. "உன்னை நீயே நன்றாகப் பார்", என்றான்.

அவளும் அந்தப் பொருட்களில் தன் உருவத்தைப் பார்த்தாள். புதிதாக உருவான பட்டாம்பூச்சியின் இறக்கையைப் போலிருந்தது அவள் முகம். "என்ன இது? என்னுடைய முகமா இது!"

"ஆம். உன்னுடைய முகமேதான்" என்றான் குதிரையில் வந்தவன்.

"ஆனால், என்னுடைய குரல்... கரடு முரடான சாலையிலே வண்டி ஓடும் பொழுது ஏற்படும் சத்தத்தைப் போலல்லவா இருக்கிறது?"

"இல்லை. சித்தார்கருவி இசைத்துக் கொண்டே பாடும் இனிமையான பாடலைப் போல் இருக்கிறது" என்றான்.

தொடரும்..

# புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம்: மிஷன் ஞாயிறு-2020 ஆம் ஆண்டு காணிக்கை

| பங்கு | தொகை |
|---|---|
| 1. கிறிஸ்து அரசர் ஆலயம், விழுப்புரம் | 300000.00 |
| 2. சம்மனசுக்கள் இராக்கினி ஆலயம்,புதுவை. | 127020.00 |
| 3. தாகூர் நகர் | 114461.00 |
| 4. உப்பளம் | 100850.00 |
| 5. வடலூர் | 100000.00 |
| 6. வில்-யனூர் | 100000.00 |
| 7. எறையூர் | 75000.00 |
| 8. திரு இருதய ஆண்டவர் பசி-க்கா | 65200.00 |
| 9. நெல்-த்தோப்பு | 58000.00 |
| 10. இருப்புக்குறிச்சி | 52500.00 |
| 11. ரெட்டியார்பாளையம் | 50000.00 |
| 12. கோணான்குப்பம் | 41014.00 |
| 13. இருதயம்பட்டு | 41000.00 |
| 14. சத்தியமங்கலம் | 35405.00 |
| 15. கடலூர் புதுநகர் | 30000.00 |
| 16. அருளம்பாடி | 25000.00 |
| 17. காரைக்கால் | 25000.00 |
| 18. பணிக்கன்குப்பம் | 25000.00 |
| 19. சவேரியார் ஆலயம், விழுப்புரம். | 25000.00 |
| 20. மேமாளூர் | 22010.00 |
| 21. இந்திரா நகர் - (நெய்வே-) | 22000.00 |
| 22. விரியூர் | 22000.00 |
| 23. மையனூர் | 21500.00 |
| 24. கல்லேரி | 18027.00 |
| 25. குருசுகுப்பம் | 15030.00 |
| 26. கள்ளக்குறிச்சி | 15000.00 |
| 27. கிருஷ்ணன்குப்பம் | 12300.00 |
| 28. திருப்பாதிரிப்பு-யூர் | 11060.00 |
| 29. சின்னசேலம் | 10200.00 |
| 30. அணையேரி | 10000.00 |
| 31. நெடுங்கம்பட்டு | 10000.00 |
| 32. தட்டாஞ்சாவடி | 10000.00 |
| 33. திருக்கோயிலூர் | 8500.00 |
| 34. குறும்பாகரம் | 8500.00 |
| 35. அழகப்பசமுத்திரம் | 8000.00 |
| 36. கல்பட்டு | 8000.00 |
| 37. முருங்கப்பாக்கம் | 8000.00 |
| 38. பெரியாகுறிச்சி | 7000.00 |
| 39. சாமுபிள்ளை நகர் | 7000.00 |
| 40. தெற்குணம் | 7000.00 |
| 41. வேலந்தாங்கல் | 6850.00 |
| 42. மேல்சித்தாமூர் | 5500.00 |
| 43. வெள்ளைகுளம் | 5000.00 |
| 44. விக்கரவாண்டி | 5000.00 |
| 45. ஆயந்தூர் | 4540.00 |
| 46. சோழம்பட்டு | 4250.00 |
| 47. செங்காடு | 4000.00 |
| 48. T.R. பட்டினம் | 3000.00 |
| 49. உளுத்தூர் | 2500.00 |
| 50. அதனூர் | 2230.00 |
| 51. கோட்டுச்சேரி | 2000.00 |
| 52. சீதேவி சவேரியார்புரம் | 2000.00 |
| 53. தியாகதுருகம் | 2000.00 |
| 54. துறிஞ்சிபூண்டி | 2000.00 |
| 55. அக்கராப்பாளையம் | 1500.00 |
| 56. துறிஞ்சிகொல்லை | 1500.00 |
| 57. ஆற்காடு | 1400.00 |
| 58. நங்காத்தூர் | 1000.00 |
| 59. சேப்பாக்கம் | 700.00 |
| 60. பெரிய நொளம்பை | 500.00 |
| 61. ஒஸ்பிஸ் மடம் | 15000.00 |
| 62. அகரக்கோட்டாலம் | -- |
| 63. அணிலாடி | -- |
| 64. அரசகுழி | -- |
| 65. அரியாங்குப்பம் | -- |
| 66. அத்திப்பாக்கம் | -- |
| 67. பாகூர் | -- |
| 68. பேராலயம் | -- |
| 69. கடலூர் - முதுநகர் | -- |
| 70. பாத்திமாபாளையம் | -- |
| 71. கெடிலம் மாரனோடை | -- |
| 72. செஞ்சி | -- |
| 73. கோரிமேடு | -- |
| 74. இருந்தை | -- |
| 75. கக்கனூர் | -- |
| 76. கணக்கன்குப்பம் | -- |
| 77. கானான்காடு | -- |
| 78. கீழ்புத்துப்பட்டு | -- |
| 79. கொடுங்கால் | -- |
| 80. கொம்மேடு | -- |
| 81. கோவிலானூர் | -- |
| 82. கூனன்குறிச்சி | -- |
| 83. மாதம்பட்டு | -- |
| 84. மணலூர்பேட்டை | -- |
| 85. மரக்காணம் | -- |
| 86. மேல்நாரியப்பனூர் | -- |
| 87. மேல்பழங்கூர் | -- |
| 88. மேல்வழி | -- |
| 89. மைக்கேல்புரம் | -- |
| 90. முகையூர் | -- |
| 91. முன்னூர் | -- |
| 92. முத்தியால்பேட்டை | -- |
| 93. நரசிங்கனூர் | -- |
| 94. நெல்-க்குப்பம் | -- |
| 95. நெய்வே- டவுன்ஷிப் | -- |
| 96. ஓதியத்தூர் | -- |
| 97. உசுட்டேரி | -- |
| 98. பெண்ணாடம் | -- |
| 99. பெரியபட்டு | -- |
| 100. ரெயின்போ நகர் | -- |
| 101. சாத்திப்பட்டு | -- |
| 102. தெளி | -- |
| 103. தென்னங்குடி | -- |
| 104. திண்டிவனம் | -- |
| 105. உளுந்தூர்பேட்டை | -- |
| 106. வீரரெட்டிகுப்பம் | -- |
| 107. வினோபா நகர் | -- |
| 108. விருத்தாசலம் | -- |
| | **1724047.00** |

அருட்திரு. கிரகோரி
பொருளாளர்,
புதுவை-கடலூர் உயர்மறை மாவட்டம்,
பேராயர் இல்லம். புதுவை-1.

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்ச

பிறப்பு: 25-08-1935



இறப்பு: 11.11.2020

திருமதி. **சலேத் ராணி**

நித்திய சாந்தி அளித்தருளும் இறைவா!
முடிவில்லா ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக!

**செபம்**

அன்பின் இறைவா! இறைவனின் திட்டப்படி இவ்வுலகில் தமக்கு கொடுக்கப்பட்ட பணியை சிறப்பாக செய்து முடித்துவிட்டு எங்களையெல்லாம் மீளா துயரத்தில் ஆழ்த்திவிட்டு உமது திருப்பாதம் வந்தடைந்த எங்கள் அன்புத் தாய்

திருமதி. **சலேத் ராணி**

அவரின் ஆன்மாவிற்கு இரக்கம் புரிந்து நித்திய பேரொளியில் சேர்த்து, முடிவில்லா பிரகாசத்தை அவருக்கு அளித்தருள மன்றாடுகிறோம்.

– ஆமென். 1கர். 1மங். 1திரி.

**திருப்ப-:** 11-11-2021 வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு, புதுவை திரு இருதய ஆண்டவர் பசி-க்காவில் நிறைவேற்றப்படும் திருப்ப-யில் கலந்துகொண்டு அவரது ஆன்மா நித்திய ஒளியில் இளைப்பாற பிரார்த்திக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
**மகன், மருமகள், மகள்கள், மருமகன், சகோதரி, பேரன், பேத்திகள்.**

---

## விண்ணக வாழ்வின் 17-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 22-07-1935



மறைவு: 10-11-2004

**பரஞ்ஜோதி (எ) அ.பிரான்சிஸ் சேவியர்**

***"விசுவாசிகளின் வாழ்வு மாறுபடுகிறதே அன்றி அழிக்கப்படுவது இல்லை"***

ஆண்டவரே! இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்! முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக. இவரது ஆன்மா இறைவனில் அமைதியடைய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**திருப்ப-:** 10-11-2021 புதன் காலை 6.00 மணிக்கு கடலூர், புனித கார்மேல் அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி: **பி. அருள்நாயகம்**
மகன்கள், மருமகள்கள்,
மகள்கள், மருமகன்கள், பேரன்கள், பேத்திகள்
மற்றும் உறவினர்கள்.
கடலூர்.

---

## விண்ணக வாழ்வின் 6-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 17-10-1932



இறப்பு: 11-11-2015

**திரு. A. மைக்கேல்துரை**

(Rtd. EID PARRY, Nellikuppam)

***"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் எவரும் இறப்பினும் வாழ்வார்" யோவான் 11:25***

**திருப்ப-:** இவரது ஆன்மஇ ளைப்பாற்றிக்காக 11–11–2021 வியாழன் காலை 6.00 மணிக்கு ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்திலும், நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், நெல்லிக்குப்பம் புனித சூசையப்பர் ஆலயத்திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**தம்பி, பிள்ளைகள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.**

---

## விண்ணக வாழ்வின் 23-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 15-03-1913



இறப்பு: 08-11-1998

**திரு. T.A. பெரியநாயகம்**

(ஆசிரியர், ஓய்வு – கணக்கன்குப்பம்)

*நான் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன் – திபா 23:6*

**திருப்ப-:** இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 08-11-2021 திங்கள் காலை 5.30 மணிக்கு கணக்கன்குப்பம், புனித லூர்து அன்னை ஆலயத்தில் திருப்ப- நிறைவேற்றப்படும்.

தந்தையை இழந்து துயருறும்
மகன்கள், மகள் மருமகன்,
மருமகள்கள், பேரக்குழந்தைகள்.
மகன்: அருட்திரு. ஆரோக்கியநாதன்
ரெட்டியார்பாளையம், புதுச்சேரி.



திரு. **Georges RAYER**

பிறப்பு:24-04-1934 இறப்பு:05-11-2019

# விண்ணக வாழ்வின்
# 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்ச-

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

எங்களை உன் உயிரினும் மேலாய்
பாதுகாத்தாய் நீ!
பூவுலகில் அனைத்துக் கடமைகளையும்
சிறப்பாய் செய்தாய் நீ!
உன்னை நாடி வந்தவர் அனைவருக்கும்
உதவினாய் நீ!
அவர்கள் மகிழ்ச்சியில் இன்பத்தை கண்டாய் நீ!
இறைவன் திருவடி சேர்ந்தாய் நீ!
முதல் ஆண்டு நிறைவு பெற்றது இன்று
உன் பசுமை நினைவுகளில் துயரத்துடன் வாழும்!

பிரிவால் துயருறும்
**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**நினைவுத் திருப்பலி:** 05-11-2021 வெள்ளிக்கிழமை, புனித ஜென்ம இராக்கினி அன்னை பேராலயத்தில் காலை 6.15 மணிக்கு நடைபெறும். இதை கண்ணுறும் அனைவரும் இவரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

## விண்ணக வாழ்வின் 7-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 21.06.1924



மறைவு: 11.09.2013

**மதர். பிபியான் தெ கொன்சகா** FSAG

தோற்றம்: 04-10-1946



மறைவு: 06-11-2013

**Rev. Fr. D. பிரான்சிஸ்**
ஜான்சி மறைமாவட்டம் **U.P.**

## முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம்: 12-08-1954



மறைவு: 13-11-2020

*திருமதி. D.L. மோட்சராணி பல்- (எ) வனஜா*

**"ஜீவியத்தில் உம்மை நேசித்தோம், மரணத்திலும் உம்மை மறவோம். இடைவிடாமல் உம் பெயரை புகழ்வோம் நன்றி பாடுவோம்.''**

**13-11-2021 அன்று** சனிக்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு, புதுவை, **திரு இருதய ஆண்டவர் பசி-க்காவில் தேவசகாயம்-லூர்துமரி, Fr.D.பிரான்சீஸ், மதர் பிபியானா, அல்போன்சா, நுகா சின்னதம்பி, நுகா சந்தரா, கிறிஸ்தியான் பல்லி, லூர்துசாமி பல்லி - மதலேன் பல்லி, வனஜா பல்லி இவர்களுக்காக நினைவு திருப்பலி நிறைவேற்றப்படும். இவர்களின் ஆன்மாக்களை நித்திய வாழ்வில் சேர்த்துக்கொள்ளும்படி இறைவனிடம் ஜெபிக்க கேட்டுக் கொள்கிறோம்.**

உடன் வருந்தும்
சகோதரர்கள் : **ராஜ் பல்-, நிக்கோல் பல்-**
**மற்றும் உறவினர்கள்.**

பிரிவால் துயருறும்
கணவர் : **D.L. நாதன்**
மகள் : **நிர்மலா - சிவக்குமார்**
மகன் : **விமல் - லீமா**
**பேரப்பிள்ளைகள்.**

# IMMACULATE INSTITUTE OF HEALTH SCIENCES

IDHAYA NAGAR, MELA PUTHAMANGALAM, THIRUNALLAR ROAD, KARAIKAL - 609 607. PUDUCHERRY.

(Run by Franciscan Sisters of the Immaculate Heart of Mary.Pondicherry)
Approved by the Govt. of Puducherry, INC New Delhi & TNMC,Chennai

இந்த கல்வி ஆண்டிற்கான **அட்மிஷன்** நடைபெறுகிறது

**CENTUM RESULT & MANY DISTINCTIONS - EVERY YEAR**

## செவிலியர் பயிற்சி




**GNM (Staff Nurse)**

கல்வித்தகுதி
+2 அனைத்து பாடப்பிரிவுகளும்
Preferably Science & Biology Groups - Marks 50%

**HOSTEL AVAILABLE**

தொடர்புக்கு : **04368 - 236840, 236830, 9655754955, 9585617785.**
E.mail : immaculatekkl@gmail.com / Website : immaculatenursingkkl.org

---

## 20th DEATH ANNIVERSARY



Birth : 06-09-1937



Death : 07-11-2001



## Mrs. CARMEN CECILIA AGARWALA

**A SUDDEN PARTING**

Holy Mass will be offered on 07-11-2021 at 8.00 a.m. at Christ the King Church, Villupuram.

***Please pray that her Soul may rest in the Lord.***

**Ms. Judy Marie,**
**Fr. Francis Joseph Agarwala**
**Mrs.Mr. Antony Martin**
**Relatives and Friends.**

---

## 2022 ஆம் ஆண்டிற்கான பஞ்சாங்கம்

பஞ்சாங்கம் தயாராகிவிட்டது.
தேவைப்படுவோர் மிஷன் அச்சகத்தை தொடர்பு கொள்ளவும்.

**விலை: ரூ. 30.00**
தபால் செலவு தனி

தொலைபேசி- 0413 2334360
அலைபேசி - 9003791058

## 2022 ஆம் ஆண்டிற்கான காலண்டர்

தேவைப்படுவோர் முன்பதிவு செய்யவும்.

**விலை: ரூ. 15.00**

---

## மிஷன் அச்சக வெளியீடுகள்

**புதிய புத்தகங்கள் தற்போது விற்பனையில் உள்ளன**



இறைவனின் அன்னையின் அற்புதமான வரலாறு
**எடுத்து வாசி பாகம் - I, II, III**
ஆசிரியர் : Bro. K.பெர்னார்டு, SFO
ஒரு புத்தகத்தின் விலை: 150.00

**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,**
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: **Very Rev. Msgr. A. Arulanandam.** Manager : **Very Rev. Msgr. A. Arulanandam.**